OPEN ACCESS

Manuscript ID:
TAM-11022026-11417

Volume: 11

Issue: 2

Month: October

Year: 2026

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 13.08.2026

Accepted: 15.09.2026

Published: 01.10.2026

Citation:
Thirumoorthy, G., et al. "The Centre and the Margin in The Novel Kovaeru Kazhuthaigal." *Shanlax International Journal of Tamil Research*, vol. 11, no. 2, 2026, pp. 90–95.

DOI:
https://doi.org/10.34293/tamil.v11i2.11417

*Corresponding Author:
thirumoorthisuthi@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

The Centre and the Margin in The Novel Kovaeru Kazhuthaigal

G. Thirumoorthy
Registration No.: BDU2110632779687, Full-Time Ph.D. Research Scholar
Department of Tamil Research
Thanthai Periyar Government Arts and Science College (Autonomous)
(Affiliated to Bharathidasan University), Tiruchirappalli

K. Kasimariyappan (Retd.)
Associate Professor, Department of Tamil Research
Thanthai Periyar Government Arts and Science College (Autonomous)
(Affiliated to Bharathidasan University), Tiruchirappalli

A. Selvarasu
Associate Professor, Department of Tamil Research
Thanthai Periyar Government Arts and Science College (Autonomous)
(Affiliated to Bharathidasan University), Tiruchirappalli

Abstract

Imayam (1964) is a notable writer who has recorded the lives of marginalised people in modern Tamil literature, and his novel Kovaeru Kazhuthaigal (1994) is among his most important works. This article examines how the novel constructs the "centre" and the "margin" and how spatial power operates through them. In the novel, the village is organised as a caste-based structure of power. The streets and public spaces of the dominant castes form the centre, where land, water, livestock, and the means of production are concentrated. The washerman and Chakkiliyar settlements and the Dalit colony (cheri) are pushed to the margin. The article shows that this division is not merely geographical. It expresses social authority, economic domination, and cultural supremacy. The analysis shows that the centre depends on exploiting the labour of service castes, who are denied fair wages and due respect. It also shows that the opposition between purity and impurity shapes the spaces themselves: the dominant-caste streets are regarded as clean and honourable, while the marginal settlements are associated with scrub forest, filth, and unsafe surroundings. The article further considers women, who are doubly oppressed by caste and gender and can be called the "margin of the margin". Their movement and bodies are controlled by caste power, as the sexual threat faced by Mary and the restriction of her movement show. The article concludes that the novel presents space as a socio-political structure formed by caste, power, labour, and gender, and that the prosperity and power of the centre are built on the labour of the margin.

Keywords: *Imayam, Kovaeru Kazhuthaigal, Centre and Margin, Space and Power, Caste, Dalit Life, Washerman Community, Purity and Impurity, Labour Exploitation, Women's Space, Double Oppression, Spatial Politics.*

References

1. Imayam. Kovaeru Kazhuthaigal (Beasts of Burden). Chennai: Kriya Pathippagam, 1994.
2. Pilavendran, S. Tamil Chinthanai Marabu (The Tradition of Tamil Thought). Chennai: Thannanane Pathippagam, 2001.
3. Muthaiah, E. Adithala Makkalin Kuriyeettup Payanaveligal (Symbolic Travel Spaces of Subaltern People). Chennai: New Century Book House (P) Ltd., 2010.

கோவேறு கழுதைகள் நாவலில் மையமும் விளிம்பும்

க. திருமூர்த்தி
பதிவு எண்: BDU2110632779687, முழுநேர முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழாய்வுத்துறை
தந்தை பெரியார் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி (த)
(பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது), திருச்சிராப்பள்ளி

க. காசிமாரியப்பன்
(ப.நி) இணைப் பேராசிரியர், தமிழாய்வுத்துறை
தந்தை பெரியார் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி (த)
(பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது), திருச்சிராப்பள்ளி

அ. செல்வராசு
இணைப் பேராசிரியர், தமிழாய்வுத்துறை
தந்தை பெரியார் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி (த)
(பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது), திருச்சிராப்பள்ளி

ஆய்வுச்சுருக்கம்

இமயம் (1964) நவீன தமிழ் இலக்கியத்தில் விளிம்புநிலை மக்களின் வாழ்க்கையைப் பதிவு செய்த குறிப்பிடத்தக்க எழுத்தாளர். அவரது முக்கியமான படைப்புகளில் ஒன்று 'கோவேறு கழுதைகள்' (1994) நாவல். இக்கட்டுரை, இந்நாவல் 'மையம்', 'விளிம்பு' ஆகியவற்றை எவ்வாறு கட்டமைக்கிறது என்பதையும், அவற்றின் வழியாக இடம் சார்ந்த அதிகாரம் எவ்வாறு செயல்படுகிறது என்பதையும் ஆராய்கிறது. நாவலில் கிராமம் சாதி அடிப்படையிலான அதிகாரக் கட்டமைப்பாக அமைந்துள்ளது. ஆதிக்க சாதியினரின் தெருக்களும் பொது இடங்களும் மையமாக விளங்குகின்றன; நிலம், நீர், கால்நடை, உற்பத்திச் சாதனங்கள் ஆகியவை அங்கே குவிந்துள்ளன. வண்ணார், சக்கிலியர் குடியிருப்புகளும் சேரியும் விளிம்புக்குத் தள்ளப்பட்டுள்ளன. இப்பிரிவினை வெறும் நிலவியல் சார்ந்தது அல்ல; அது சமூக அதிகாரம், பொருளாதார ஆதிக்கம், பண்பாட்டு மேலாண்மை ஆகியவற்றின் வெளிப்பாடு என்பதை இக்கட்டுரை நிறுவுகிறது. மையம் நிலைத்திருப்பது சேவைச் சாதியினரின் உழைப்புச் சுரண்டலைச் சார்ந்தது என்பதையும், அவர்களுக்கு நியாயமான கூலியும் உரிய மரியாதையும் மறுக்கப்படுகின்றன என்பதையும் இந்த ஆய்வு காட்டுகிறது. தூய்மை × தீட்டு என்ற எதிர்மையும் இடங்களையே வடிவமைக்கிறது என்பதையும் இது எடுத்துரைக்கிறது: ஆதிக்க சாதியினரின் தெருக்கள் தூய்மையானவையாகவும் மதிப்புக்குரியவையாகவும் கருதப்படுகின்றன; விளிம்புநிலைக் குடியிருப்புகளோ முட்புதர்க் காடு, அழுக்கு, பாதுகாப்பற்ற சுற்றுப்புறம் ஆகியவற்றுடன் தொடர்புபடுத்தப்படுகின்றன. மேலும், சாதி, பாலினம் ஆகிய இரு நிலைகளிலும் ஒடுக்கப்படும் பெண்களை 'விளிம்பின் விளிம்பு' எனக் குறிப்பிடலாம் என்பதையும் இக்கட்டுரை பரிசீலிக்கிறது. மேரி எதிர்கொள்ளும் பாலியல் அச்சுறுத்தலும் அவளது நடமாட்டத்தின் மீதான கட்டுப்பாடும் காட்டுவது போல, அவர்களது நடமாட்டமும் உடலும் சாதி அதிகாரத்தால் கட்டுப்படுத்தப்படுகின்றன. சாதி, அதிகாரம், உழைப்பு, பாலினம் ஆகியவற்றால் உருவான சமூக-அரசியல் கட்டமைப்பாக இந்நாவல் இடத்தை முன்வைக்கிறது என்றும், மையத்தின் செழிப்பும் அதிகாரமும் விளிம்பின் உழைப்பின் மீதே கட்டப்பட்டுள்ளன என்றும் கட்டுரை முடிவுக்கு வருகிறது.

முக்கிய சொற்கள்: *இமயம், கோவேறு கழுதைகள், மையமும் விளிம்பும், இடமும் அதிகாரமும், சாதி, தலித் வாழ்க்கை, வண்ணார் சமூகம், தூய்மை × தீட்டு, உழைப்புச் சுரண்டல், பெண்களின் இடம், இரட்டை ஒடுக்குமுறை, இடஞ்சார் அரசியல்.*

முன்னுரை

தமிழ் நவீன இலக்கியத்தில் விளிம்புநிலை மக்களின் வாழ்க்கையைப் பதிவு செய்தவர்களுள் எழுத்தாளர் இமையம் (1964) குறிப்பிடத்தக்கவர் ஆவார். அவர்தம் புனைவுகள் விளிம்புநிலையினர் எதிர்கொள்ளும் சமூக ஒடுக்குமுறைகளை மையமிடுகின்றன. அவற்றுள் கோவேறு கழுதைகள் (1994) நாவல் முக்கியப் படைப்பாகும். இந்நாவலில் கிராமவெளி வாழ்விடம் அதிகாரம் செயல்படும் பல்வேறு சமூக வெளிகளாக உள்ளது. ஆதிக்கச் சாதியினரின் தெருக்கள், பொதுவெளிகள் ஆகியவை சமூகத்தின் மையமாகக் கட்டமைக்கப்பட்டுள்ளன. அதேவேளையில் சேரி, வண்ணார் குடியிருப்பு, சக்கிலியர் குடியிருப்பு போன்றவை விளிம்பு வெளியாக உருவாக்கப்பட்டுள்ளன. இந்தப் பிரிவுகள் வெறும் புவியியல் அமைப்பல்ல; சமூக அதிகாரம், பொருளாதார ஆதிக்கம், பண்பாட்டு மேலாதிக்க வெளிப்பாடுகளாக அமைகின்றன. இக்கட்டுரை கோவேறு கழுதைகள் நாவலில் மையமும் விளிம்பும் எவ்வாறு உருவாக்கப்படுகிறது; அவற்றின் வழி வெளி அதிகாரம் எங்ஙனம் இயங்குகிறது என்பவற்றை ஆராய்கிறது.

மையமும் விளிம்பும்

சமூக, பண்பாட்டு, வெளி அரசியல் ஆய்வுகளில் மையம் விளிம்பு என்ற கருத்தாக்கங்கள் இடம் பெறுவன. ஒரு சமூகத்தில் அதிகாரம், சொத்துடைமை, முடிவெடுக்கும் உரிமை, பண்பாட்டு மேலாதிக்கம் ஆகியவை குவிந்திருக்கும் இடம் மையமாகக் கருதப்படுகிறது. உரிமை மறுக்கப்பட்டு, சமூகப் பங்கேற்பிலிருந்து விலக்கப்பட்டுப் பிறரைச் சார்ந்து வாழ வேண்டிய நிலைக்குத் தள்ளப்படும் சமூகங்களின் வாழ்விடம் விளிம்பாக அமைகிறது.

மையமும் விளிம்பும் இயற்கையாக உருவாகும் நிலை அல்ல; அதிகாரம் உருவாக்கும் சமூகக்கட்டமைப்பு ஆகும். ஆதிக்கஅரசியல் உருவாக்கும் ஒதுக்கப்பட்ட வெளியே விளிம்பாகும். உயர்சாதியினர், ஆண்கள், சொத்துடைமையாளர்கள் ஆகியோர் மைய வெளிக்குரியவர்களாகவும், தாழ்த்தப்பட்ட சாதியினர், பெண்கள், பொருளாதார ரீதியாக ஒடுக்கப்பட்டோர் ஆகியோர் விளிம்பிற்குரியவர்களாகவும் கட்டமைக்கப் படுகின்றனர். (இ.முத்தையா, 2010: 08)

கோவேறு கழுதைகள் நாவல் மையம் - விளிம்பு என்னும் முரணில் இயங்குகிறது. கிராமத் தெருக்கள், குடியிருப்புகள், நிலங்கள், நீர்நிலைகள், மனித உறவுகள், பெண்களின் உடல், உழைப்பு ஆகிய அனைத்தும் மையம் - விளிம்பு என்ற அதிகார அரசியலுக்குள் பொருள் பெறுகின்றன. கோவேறு கழுதைகள் நாவலில் வெளி என்பது வெறும் இடவியல் அல்ல; சமூக அதிகாரத்தின் காட்சிப்படுத்தலாக அமைகிறது.

ஆதிக்கச் சாதியினரின் மையவெளி

கோவேறு கழுதைகள் நாவலில் சாதியை அடிப்படையாகக் கொண்ட அதிகாரக் கட்டமைப்பாகக் கிராமம் உருவாக்கப் பட்டுள்ளது. கிராம மையப்பகுதிகள் ஆதிக்கச் சாதியினரின் வாழ்விடங்களாகவும், விளிம்புப் பகுதிகள் ஒடுக்கப்பட்ட மக்களின் குடியிருப்புகளாகவும் உள்ளன. மையமும் விளிம்பும் “ஊர் என்றும் சேரி என்றும்” பிரிக்கப்பட்டிருக்கிறது என்று மொஃபாத் கூறுவதைச் ச. பிலவேந்திரன் (2004:162) சுட்டுவது பொருத்தப்பாடுடையதாகும். இந்த இடவியல் அமைப்பு வெறும் குடியிருப்பு வேறுபாடாக இல்லாமல், சமூக அதிகாரப்

புவியியல் வடிவமாக வெளிப்படுகிறது. நாவலில் உடையார், கவுண்டர், செட்டியார், சேர்வை, பிள்ளை போன்ற மேல்குடிக் காரர்கள் ஊரின் மேடான பகுதிகளிலும் குடித்தெருக்களிலும் வாழ்கின்றனர். நிலம், நீர், கால்நடை, உற்பத்தி வளங்களின் உரிமை அவர்களிடமே குவிந்துள்ளது. பொருளாதார அதிகாரமும் சமூக மேலாதிக்கமும் ஒரே இடத்தில் ஒன்றிணைகின்றன. இங்கு மையம் என்பது நிலவுடைமையும் அதிகாரமும் ஒன்றிணையும் வெளியாக அமைகிறது.

ஒடுக்கப்பட்டோர் விளிம்புவெளி

வண்ணார், சக்கிலியர் போன்ற சேவைச் சாதியினர் தங்கள் உழைப்பை ஆதிக்கச் சாதியினருக்காகச் செலவிடுகின்றனர். ஆரோக்கியம், சவுரி, ஜோசப் என்று குடும்பமே களம் தூற்றுகிறது. அதற்குச் சரியான கூலி வழங்கப்படவில்லை. அது குறித்த உரையாடல் இந்த ஊர்லயே உங்களுக்குத்தாங்க நாப்பது, அம்பது கல வரவு, நீங்களே இப்படிச் செஞ்சா, மூணு மொறமாப் போடுங்க இனிமே ரண்டுதான். இஷ்டமிருந்தா தூத்து. இல்லாட்டி அடுத்த வருஷத்துக்கு நீ வரவாணாம். *(1994:36)* என்று அமைகிறது. உழைப்பிற்கு உரிய மதிப்போ சமமான கூலியோ கிடைப்பதில்லை என்பதை இது காட்டுகிறது. இவ்வாறு மையம் என்பது உற்பத்தி வளங்களின் மையமாக மட்டுமல்லாமல், உழைப்பைச் சுரண்டும் பொருளாதார அமைப்பின் மையமாகவும் விளங்குகிறது.

மையவெளியின் "தூய்மை" என்ற கருத்தாக்கத்தையும் கொண்டுள்ளது. ஆதிக்கச் சாதியினரின் தெருக்கள் தூய்மையான, மதிப்புமிக்க வெளியாகக் கருதப்படுகிறது. அவற்றிற்கு எதிராக விளிம்புப் பகுதிகள் புறம்போக்கு, கருவேலங்காடு போன்றவைகளாக உள்ளன. அவை அசுத்தம், துர்நாற்றம், கழிவுநீரைக் கொண்டுள்ளன.

காலனிக்கும் சக்கிலியர் குடியிருப்புக்கும் இடைப்பட்ட பகுதியில் ஆரோக்கியம் - சவுரி குடும்பம் வாழும் வண்ணார் குடியிருப்பு அமைந்துள்ளது. இந்த இடவியல் வெளி அமைப்பு சமூகப் படிநிலையின் வெளிப்பாடாக அமைகிறது. ஒவ்வொரு சாதிக்கும் தனித்தனி சேவைப் பகுதி ஒதுக்கப்பட்டிருப்பதையும், அதற்கேற்ப குடியிருப்புகளும் பிரிக்கப்பட்டிருப்பதையும் காணமுடிகிறது. ஊருக்கும் வண்ணான், சக்கிலியக்குடிக்கும் இடையே கருவேலங் காட்டைப் பிளந்து ஒரு பாதை இருக்கிறது. அது கொடிபோல் வளைந்து நெளிந்து இருக்கும். ஒரு ஆள் மட்டுமே நடக்க வசதியான பாதை. இது மழைக் காலத்தில் முழங்கால்வரை சேறு வாங்கும். "சதக் புதக்" கென்றுதான் நடக்க வேண்டும். வெயில் காலமோ, மழைக் காலமோ எப்போதும் இந்தப் புதருக்குள் பன்றிகளின் உறுமல், நாய்களின் குரைப்புக் கேட்கும். சில இரவுகளில் நரிகளின் ஊளைச் சத்தமும் கேட்கும் *(1994:81-82)* என்ற வர்ணனையில் சக்கிலியர் குடியிருப்பைச் சுற்றியுள்ள கருவேலங்காடு பெண்கள் திறந்தவெளியில் மலம் கழிக்கும் இடமாகவும், பன்றிகள் உலவும் பகுதியாகவும், பூச்சிகளின் இரைச்சல் நிறைந்த பாதுகாப்பற்ற வெளியாகவும் சித்திரிக்கப்படுகிறது. மழைக் காலங்களில் சேறும் சகதியுமாக மாறும் குறுகிய பாதை, அந்தக் குடியிருப்பின் சமூக ஒதுக்குதல், அடிப்படை வசதிகளின் மறுப்பு ஆகியன விளிம்புவெளியை வெளிப்படுத்துகிறது.

ஊரின் மேடான பகுதிகளில் இருந்து வெளியேறும் கழிவுநீர் வண்ணார் குடியிருப்புகளைக் கடந்து புறம்போக்கிடத்தில் தேங்குவது சாதாரண இயற்கை நிகழ்வு அல்ல. அது அதிகார வெளி அரசியலைக் காட்டுகிறது. மேலிருந்து கீழாகப் பாயும் கழிவுநீரைப் போலவே, சமூக அதிகாரமும் ஆதிக்கச் சாதியினரிடமிருந்து ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையை நோக்கிப் பாய்கிறது.

விளிம்பின் விளிம்பாக பெண்வெளி

விளிம்பில் வாழும் பெண்கள் சாதியாலும் பாலினத்தாலும் இரட்டை ஒடுக்குமுறையை எதிர்கொள்கின்றனர். தலித் பெண்கள் அன்றாட வேலைக்காக ஆதிக்கச் சாதியினரின் பகுதிகளுக்குச் செல்ல வேண்டிய சூழலில் சவுரியின் தங்கைகளும் ஆரோக்கியமும் உள்ளனர். பறையர் சாதியைச் சார்ந்த சடையன் என்பவர் வீட்டிற்குத் துணி எடுக்க மேரி செல்கிறார். அவரைப் பாலியல் வன்முறைக்குச் சடையன் ஆளாக்குகிறார். ஆரோக்கியத்தின் மகள் மேரியின்மேல் பிடி அழுந்தி இறுக்கியது வண்ணாத்தி சாமீ, வாக்கப்படப்போறவ சாமீ, சாதிக் குத்தமாயிடும் சாமீ, உண்டாயிடும் சாமீ, உசுரப் போக்கிப்பேன் சாமீ ஆரோக்கியத்திற்கு எல்லாம் புரிந்துவிட்டது. அவளும் பெண்தான். இந்த ஊரிலேயே வாழ்ந்த அவளுக்குத் தெரியாதா? மேரியின் அர்த்தம் என்ன என்பதை ஆரோக்கியத்திடமிருந்து மறைக்க முடியாது (1994:56-57) என்ற நாவல் பகுதி அச்சுறுத்தல்களையும் வன் முறைகளையும் காட்டுகிறது. பாலியல் அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளும் மேரியின் புழங்குவெளியை ஆரோக்கியம் தடுக்கிறார். எனவே, ஆரோக்கியம் இனிமேல் சோறு, துணியெடுக்க மேரியை அனுப்பக் கூடாது, ஏன் தொரப்பாட்டுக்குக்கூட அழைத்துப் போகக் கூடாதென்று தீர்மானித்தாள். (1994:58) மேரியை இனிமேல் வேலைக்குச் செல்ல அனுமதிக்கக் கூடாது என்று ஆரோக்கியம் முடிவெடுப்பது, பெண்ணின் புழங்குவெளி பாதுகாப்பின்மையால் சுருக்குவதை வெளிப்படுத்துகிறது. சாதிய அதிகாரம் பெண்களின் உடலையும் நடமாட்டத்தையும் கட்டுப்படுத்தும் கருவியாகச் செயல்படுகிறது.

மையமும் விளிம்பும்: அதிகார அரசியல்

பண்பாட்டு மதிப்பீடுகளும் தூய்மை - அசுத்தம், உயர்வு - தாழ்வு, உரிமை - சார்புநிலை போன்ற இருமைக் கருத்தாக்கங்களும் மையவெளியை உருவாக்குகின்றன. இதன் விளைவாக ஆதிக்கச் சாதியினரின் வாழ்க்கை இயல்பானது என்றும், ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்க்கை கீழானது என்றும் சமூக மனப்பாங்கு உருவாக்கப்படுகிறது. விளிம்புவெளியில் வாழும் மக்களின் உழைப்பு மையத்தின் வாழ்வைத் தாங்குகிறது. உழைப்பிற்குரிய மரியாதையோ சமமான பொருளாதார மதிப்போ வழங்கப்படுவதில்லை. இந்த முரண்பாடு, உழைப்பைச் சுரண்டி அதிகாரத்தை நிலை நிறுத்தும் சாதிய அமைப்பின் அடிப்படை இயல்பை வெளிப்படுத்துகிறது.

முடிவுரை

கோவேறு கழுதைகள் நாவல் தலித் வாழ்வியலைப் பதிவு செய்த புனைவாக மட்டுமல்ல; மையம்-விளிம்பு என்ற வெளி கருத்தாக்கத்தைத் தமிழ் நாவல் வடிவில் வெளிப்படுத்திய படைப்பாகவும் விளங்குகிறது. இந்நாவலில் வெளி என்பது வெறும் புவியியல் அமைப்பு அல்ல; சாதி, அதிகாரம், உழைப்பு, பாலினம் ஆகியவை ஒன்றிணைந்து உருவாக்கும் சமூக அரசியல் கட்டமைப்பாக அமைகிறது. மையத்தின் வளமும் அதிகாரமும் விளிம்பின் உழைப்பையும் அடிப்படையாகக் கொண்டே கட்டமைக்கப் படுகின்றன என்பதை இமையம் புலப்படுத்துகிறார்.

துணைநூல்கள்

1. இமையம் - கோவேறு கழுதைகள், சென்னை: க்ரியா பதிப்பகம், 1994.
2. பிலவேந்திரன், ச. - தமிழ்ச் சிந்தனை மரபு, சென்னை: தன்னனானே பதிப்பகம், 2001
3. முத்தையா, இ. - அடித்தள மக்களின் குறியீட்டுப் பயணவெளிகள், சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., 2010.